"DINAKARAN"

PAGE NO: 04 DATE: 28.01.2023

# புதுவை பல்கலையில் ஜி20 பூங்கா திறப்பு

புதுச்சேரி, ஜன. 28: புதுவைப் பல்கலைக்கழகத்தில் இந்தியாவின் 74வது குடியரசு தினம் கொண்டாடப்பட்டது. துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு மகாத்மா காந்தி மற்றும் அம்பேத்கர் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதைச் செலுத்தினார். தொடர்ந்து தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி உரையாற்றினார்.

தொடர்ந்து அவர் புதுவைப் பல்கலைக்கழகம் சார்பில் ஜி20 பூங்காவினை திறந்து வைத்தார். முன்னதாக பல்கலைக்கழகத்திற்கு வருகைத் தந்த துணைவேந்தருக்கு நிர்வாகம் சார்பாக காவல்துறைக் கண்காணிப்பாளர் நல்லம் கிருஷ்ணராய பாபு தலைமையில் அணிவகுப்பு மரியாதை கொடுக்கப்பட்டது.

விழாவில் இயக்குனர் பேராசிரியர் தரணிக்கராசு, சிறப்பு அதிகாரி பேராசிரியர் ராஜீவ் ஜெயின், பதிவாளர் பேராசிரியர் ரஜ்னீஷ் புடணி, நிதி அதிகாரி பேராசிரியர் இலசார், புல முதன்மையர்கள், துறைத் தலைவர்கள், அதிகாரிகள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். குடியரசு தின விழா கொண்டாட்டத்தை முன்னிட்டு பல்கலைக்கழகம் முழுவதும் வண்ண விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.




புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் குடியரசு தினத்தையொட்டி துணைவேந்தர் குர்மீத் சிங் ஜி20 பூங்காவை திறந்து வைத்து பார்வையிட்டார்.